பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 10 2025 SATURDAY 7.15 PM
ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. ”ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம்” இயக்கத்தின் கீழ் ஆறரை கோடி மகளிர் பயன்பெற்றிருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. அடுத்த ஆண்டு மார்ச் இறுதிக்குள், நக்ஸல் தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க அரசு திட்டமிட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. உரிமை கோரப்படாத நிதியை உரியோருக்கு வழங்குவதை உறுதி செய்ய ”உங்கள் நிதி – உங்கள் அதிகாரம்” பிரச்சார இயக்கம் தொடங்கப்பட்டிருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

4. Fastag வசதி இல்லாத வாகனங்கள் சுங்கச்சாவடிகளில் UPI மூலம் கட்டணம் செலுத்தினால், ஒன்று புள்ளி இரண்டு ஐந்து மடங்கு கட்டணம் வசூலிக்க வகை செய்யும் சட்டத்திருத்தம் அடுத்த மாதம் 15-ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரில் இந்திய அணித் தலைவராக சுப்மன் கில் அறிவிக்கப்பட்டுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம் இயக்கத்தின் கீழ் 6 கோடியே 50 லட்சம் மகளிருக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

*இதுதொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டாவின் சமூக வலைதள பதிவை பகிர்ந்துள்ள பிரதமர், மக்கள் பங்கேற்பிற்கு இது மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று கூறியுள்ளார்.*

*மகளிர் சக்தியை மேம்படுத்தவும், இந்த இயக்கத்தை பயனுள்ளதாகவும் மாற்ற பாடுபட்ட அனைவருக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.*

<<<<<>>>>>

அடுத்த ஆண்டு மார்ச் இறுதிக்குள், நக்ஸல் தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் Bastar மாவட்டத்தில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், அனைத்து நக்ஸலைட்டுகளும் சரணடைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நக்சல் அமைப்பினர்களுக்கு எதிராக பாதுகாப்புப்படையினர் கடும் நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்றும் அவர் எச்சரித்தார்.

நக்ஸலைட்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசும், சத்தீஸ்கர் மாநில அரசும் உறுதி பூண்டிருப்பதாக அவர் கூறினார்.

சரணடைந்த நக்ஸலைட்டுகளின் வாழ்க்கையை சீரமைப்பதற்கான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

உரிமை கோரப்படாத நிதியை உரியோருக்கு வழங்குவதை உறுதி செய்ய ''உங்கள் நிதி – உங்கள் அதிகாரம்'' பிரச்சார இயக்கம் தொடங்கப்பட்டிருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நாடு தழுவிய இந்த பிரச்சார இயக்கத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

வங்கி மற்றும் பல்வேறு நிதி நிறுவனங்களில் உரிமை கோரப்படாமல் உள்ள சொத்துக்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு சட்டப்பூர்வமாக விரைந்து வழங்குவதற்கு இந்த இயக்கம் வழிவகை செய்யும் என்று அவர் கூறினார்.

பயனாளிகள் இந்த திட்டம் குறித்து அறிந்துகொள்வதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உரிமைக் கோருபவர்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் இடையே பாலமாக இந்த பிரச்சாரம் அமையும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

இந்தியாவில் முதலீடு செய்ய சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும் என்று மத்திய வர்த்தக தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிங்கப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியா அளிக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியாவின் வணிகம், பொருளாதார வாய்ப்புகள், பணியாளர்களின் திறன் ஆகியவற்றை சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

பீகாரில் Chhat பண்டிகை வரும் 25 ஆம் தேதி தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறவுள்ள நிலையில், சட்டப்பேரவைத் தேர்தல் அதற்கு பின்னர் நடத்தப்பட வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் கேட்டுக் கொண்டுள்ளன.

பட்னாவில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு Gyanesh Kumar தேர்தல் ஆணையர்கள் திரு S S Sandhu, திரு விவேக் ஜோஷி ஆகியோரிடம் தேசிய கட்சி மற்றும் மாநில அரசியல் கட்சி உறுப்பினர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

இதில் தேர்தல் நடைபெறும் தேதி குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

<<<<<>>>>>

Fastag வசதி இல்லாத வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகளில் UPI பரிவர்த்தனை மூலம் கட்டணம் செலுத்தினால், ஒன்று புள்ளி இரண்டு ஐந்து மடங்கு கட்டணம் வசூலிக்க வகை செய்யும் சட்டத்திருத்தம் அடுத்த மாதம் 15ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

இதுதொடர்பாக, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், அத்தகைய வாகனங்கள் பணமாக கட்டணம் செலுத்தினால், இரண்டு மடங்கு தொகையை செலுத்தும் வகையிலும் திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

<<<<<>>>>>

*மும்பை தீவிரவாத தாக்குதலுக்கு பின்னர் பாகிஸ்தானுக்கு எதிராக அப்போதைய காங்கிரஸ் அரசு பதிலடி கொடுக்க தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.*

*புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு கௌரவ் பாட்டியா, வெளிநாட்டு நெருக்கடிகளுக்கு அடிபணிந்து பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கையை காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு தவிர்த்து விட்டதாக குறை கூறியுள்ளார்.*

*நாட்டின் தேசிய விவகாரங்களில் வெளிநாட்டு சக்திகள் தலையிடுவதை அப்போதைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அனுமதித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*வெளிநாடுகளில் இந்தியாவின் நற்பெயரை சீர்குலைக்கும் வகையில் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி செயல்படுவதாகவும் திரு கௌரவ் பாட்டியா குற்றம் சாட்டியுள்ளார்.*

<<<<<>>>>>

குஜராத் மாநில பிஜேபி தலைவராக அம்மாநில அமைச்சர் திரு ஜெகதீஷ் விஷ்வகர்மா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தலைநகர் காந்திநகரில் இன்று மத்திய அமைச்சரும், அக்கட்சியின் குஜராத் தேர்தல் பார்வையாளருமான திரு பூபேந்தர் யாதவ், இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

குஜராத் மாநில பிஜேபி தலைவராக பதவி வகித்து வந்த மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு சி ஆர் பாட்டீலின் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.

<<<<<>>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் Chhindwara மாவட்டத்தில் இருமல் மருந்து அருந்திய 9 குழந்தைகள் உயிரிழந்ததை அடுத்து Coldrif என்ற இருமல் மருந்தை தடை செய்து மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு மோகன் யாதவ் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், குழந்தைகளின் உயிரிழப்பு அதிர்ச்சி அளிப்பதாகவும், அந்த மருந்து நிறுவனத்தின் அனைத்து பொருட்களையும் தடை செய்வதாகவும் கூறியுள்ளார்.

தமிழகத்தின் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த இந்த மருந்து நிறுவனத்தின் மீது விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசை அம்மாநில அரசு வலியுறுத்தியிருந்தது.

தமிழக அரசு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மத்தியப்பிரதேச அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரில் அமைதியை நிலைநாட்ட அம்மாகாண அரசுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜம்மு கஷ்மீர் அவாமி அமைப்பு கடந்த மாதம் 29 ஆம் தேதி தொடங்கிய போராட்டத்தில் 10 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

<<<<<>>>>>

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் மின்னணு பயண அனுமதி பெற வேண்டும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இலங்கை அரசின் குடியேற்ற கட்டுப்பாட்டு துறை இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், வரும் 15 ஆம் தேதி முதல் இந்த புதிய நடைமுறை அமலுக்கு வருகிறது என்று கூறியுள்ளது.

<<<<<>>>>>

*ஜப்பானில் ஆளும் விடுதலை ஜனநாயக கட்சித் தலைவராக திருமதி Sanae Takaicha தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.*

*இதற்கான முதற்கட்ட வாக்கெடுப்பில் கூடுதல் வாக்குகளை அவர் பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இதனையடுத்து ஜப்பானின் முதலாவது பெண் பிரதமராக அவர் வரும் 15 ஆம் தேதி பதவியேற்கக்கூடும் என்றும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.*

<<<<<>>>>>

அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் கொண்டு வந்த காஸா அமைதி பேச்சுவார்த்தையின் அடிப்படையில் பிணைக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் அமைப்பு ஒப்புக்கொண்டதற்கு ஐநா பொதுச்செயலாளர் திரு அண்டோனியோ குட்ரஸ் வரவேற்றுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா பகுதியில் அமைதியை ஏற்படுத்த கத்தார், எகிப்து நாடுகளின் முயற்சிகளுக்கும் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதற்காக அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், பிணைக் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் திரு குட்ரஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரில் இந்திய அணித் தலைவராக சுப்மன் கில் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தேர்வுக்குழு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ரோஹித் ஷர்மாவுக்கு பதிலாக சுப்மன் கில் அணித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

இருஅணிகளுக்கு இடையேயான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி வரும் 19 ஆம் தேதி பெர்த்திலும், 23 ஆம் தேதி அடிலெய்டிலும், 25 ஆம் தேதி சிட்னியிலும் நடைபெறவுள்ளன.

--------------

*Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shriyanshi Valishetty, Tasnim Mir ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.*

*ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Shriyanshi Valishetty, 21-11, 21-12 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் Chiara Marvella-வை வென்றார்.*

*மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் Tasnim Mir 9-21, 21-17, 21-10 என்ற செட் கணக்கில், துருக்கியின் Neslihan Arin -ஐ வென்றார்.*

-----------

வெஸ்ட் இண்டீஸூக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 140 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dakshineshwar Suresh – அமெரிக்காவின் Andrew Delgado இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

------------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் புனே – ஜெய்பூர் அணியையும், குஜராத் – பெங்கால் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<END>>>>>